## தற்காலிக மற்றும் இடைநிலை புகலிடங்கள்

மோசமான பேரிடர்கள் நிகழும் போது தற்காலிக மையங்களில் பொது மக்களை தங்க வைக்கும் காலம் சில சமயங்களில் அனுமானிப்பதை விட நீண்டு செல்லலாம். அசாதாரணமான பேரிடங்கள் மிகவும் அபாயகரமானவை. எனவே, 2004 ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரழிவின் போது ஏற்படுத்தப்பட்ட இடைநிலை மையங்களை போல் உருவாக்க நேரிடும்.

2004 ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரிடரால் கடலோர வாழ்மக்கள் அவர்களின் வாழ்விடத்தில் இருந்து பாதுகாப்பான வேறு இடத்திற்கு குடிப்பெயர தேவை ஏற்பட்டது. அரசானது இருக்கும் இடங்களில் மிகவும் பொருத்தமான இடத்தை தேர்வு செய்து மக்களை குடியமர்த்தியது. பேரழிவு காரணமாக இருப்பிடம் அழிக்கப்பட்ட / சேதப்படுத்தப்பட்ட மக்கள் தற்காலிக வசிப்பிடங்களில் வசிக்க வழிவகை செய்யப்பட்டது.

**நிவாரண மைய மேலாண்மை**

அடிப்படை வசதிகளான, உணவு, தண்ணீர், சுகாதார வசதிகள் ஆகியவை நிவாரண மையங்களில் வழங்கப்பட்டன. மேலும் தனிநபர் சுதந்திரம், பாதுகாப்பு, பெண்களுக்கான பிரத்யேக வசதிகள் ஆகியவை உறுதி செய்யப்பட்டன. பேரிடரில் பாதிக்கப்பட்டும் மக்களுக்கு வழங்கப்பட்ட வேண்டிய நிவாரணம் குறித்து தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிகாட்டுதல்கள் வழங்கியுள்ளது. இது தொடர்பான தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய சுற்றறிக்கை எண்.NC 1 (4) / 3137 /2017 நாள் 08.09.2017 ன்படி செயல்பட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- 121 பன்முக பாதுகாப்பு மையங்கள் நீங்கலாக, பள்ளி, அங்கன்வாடி மையங்கள், புயல் நிவராண மையங்கள், சமுதாய கூடங்கள், திருமண மண்டங்கள் ஆக மொத்தம் 3172 கட்டிடங்கள் கடலோர மாவட்டங்களில் ஏற்படும் பேரிடங்களின் போது நிவாரண மையங்களாக பயன்படுத்த இனம் கண்டறியப்பட்டுள்ளன.

- 121 பன்முக பாதுகாப்பு மையங்கள் நீங்கலாக, பள்ளி, அங்கன்வாடி மையங்கள், புயல் நிவராண மையங்கள், சமுதாய கூடங்கள், திருமண மண்டங்கள் ஆக மொத்தம் 3172 கட்டிடங்கள் கடலோர மாவட்டங்களில் ஏற்படும் பேரிடங்களின் போது நிவாரண மையங்களாக பயன்படுத்த இனம் கண்டறியப்பட்டுள்ளன.
- மாற்றுத்திறனாளிகள், முதியோர் உடல் நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு தனிப்பட்ட முறையில் சிகிச்சை தர சிறப்பு செய்யப்பட்டுள்ளன.
- பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து மின்சார உபயோக கட்டமைப்புகள் பரிசோதனை செய்து அவற்றின் பாதுகாப்பு வசதி செய்யப்படுகிறது.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் வழங்கப்பட்டு உள்ள வழிகாட்டுதல்களின் படி உணவு, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் குறைந்த பட்ச தரம் உறுதி செய்து வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## குறைந்தபட்ச நிவாரணம் (உணவு மற்றும் ஊட்டச்சத்து)

- குழுந்தைகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு பால் மற்றும் பால்சார்ந்த பொருட்கள் வழங்கப்படுகிறது.
- முகாம்களில் உள்ள சமையலறைகளில் சுகாதாரம் பேண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
- சிறார்களுக்கு நாள் ஒன்றக்கு குறைந்தபட்சம் 1700 கலோரிகள், பெரியவர்களுக்கு 2400 கலோரியும் பெறும் வகையில் உணவுகள் வழங்கப்படுகிறது.

## குடிநீர், நீர் அகற்றம் மற்றும் சுகாதாரம்

பேரிடர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீர் மூலம் பரவும் தொற்று நோய்கள் தாக்கா வண்ணம், சுத்தமான குடிநீர் வழங்குதல் என்பது மிகவும் முக்கியமானதாகும். நாளொன்றுக்கு ஒரு நபருக்க குறைந்தது 3 லிட்டர் குடிநீர் வழங்கப்படுவதை அரசு உறுதி செய்துள்ளது.

முகாம்களில் தங்கும் ஆண், பெண் மற்றும் சிறார்களுக்கு சுகாதாரம் மற்றும் தனிநபர் சுதந்திரம் ஆகியவை காக்கப்படுவது என்பது அரசுக்கு மிகப்பெரிய சவாலாகும். தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய வழிகாட்டுதலின் படி குறைந்த பட்ச தர அளவுகளின்படி சுகாதாரம் பேணப்பட்டு வருகிறது.

சுகாதாரம் தொடர்பாக பின்வரும் நடைமுறைகள் நிவாரண முகாம்களில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன

- 30 நபர்களுக்கு 1 கழிவறை
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தனித்தனியே கழிவறை வசதி